

கழக தலைமைக் கழக பேச்சாளர் வேடசந்தூர் முருகவேல் – இலக்கியா திருமணத்தை கழக கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி சிவா எம். பி . நடத்தி வைத்தார். உடன் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் உட்பட பலர் உள்ளனர்.

### கழகத் தீர்மானக் குழுச் செயலாளர்

# அக்ரி கணேசன், பா. பொன்னையன் ஐ.ஏ.எஸ். இல்ல திருமண விழா!

### அமைச்சர் பெருமக்கள் – எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் – அரசு அதிகாரிகள் – கழக முன்னணியினர் பங்கேற்பு!

மதுரை, செப் 7-

கழகத் தீர்மானக் குழு செயலாளரும் முன்னாள் மாநில வேளாண்மை விற்பனைக் குழு தலைவருமான அக்ரி கே.பி.டி. கணேசன் தம்பியும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை இயக்குனருமான பா. பொன்னையா ஐ.ஏ.எஸ்., மகள் திருமணம் வரும் 8ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டினத்தில் உள்ள மணமகன் இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது, அதன் விபரம்

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி முன்னாள் ஒன்றிய கழக செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினருமான மறைந்த பால்சாமி அவர்கள் பேத்தியும், கழக மாநில தீர்மானக்குழு செயலாளர், அக்ரி கே.பி.டி. கணேசன் தம்பியும்,

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை இயக்குனர் பா. பொன்னையா ஐ.ஏ.எஸ்., இ.சிநேகலதா தம்பதியினரின் மகள் பா.சௌதாமினி எம்.பி.பி.எஸ்., புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா முத்துப்பட்டினம் எஸ். ராமச்சந்திரன், கீதா தம்பதியரின் மகன் பொறியாளர் ரா.பாலசண்முகம் ஆகியோரின் திருமணம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டினத்தில் அமைந்துள்ள மணமகன் இல்லத்தில் காலை 8.45 மணிக்கு மேல் 9.55 மணிக்குள் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து 10.09.2024 ஆம் தேதி மாலை 06.30 மணிக்கு சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள ஐடிசி கிராண்ட் சோலா ஹோட்டல் ராஜேந்திரன் அரங்கத்தில் வரவேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அதேபோல் மதுரையில் வரும் 13.09.2024ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு மேல் 3மணிக்குள் பா. சௌதாமினி, ரா.பாலசண்முகம் தம்பதியரின் வரவேற்பு நிகழ்ச்சிகள் மதுரை தூத்துக்குடி சாலையில் உள்ள வேலம்மாள் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஐடா ஸ்கட்டர் அரங்கம் 1ல் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

திருமணம் மற்றும் வரவேற்பு நிகழ்ச்சிகளில் அமைச்சர் பெருமக்கள், அதிகாரி பெருமக்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொழிலதிபர்கள், கழகத்தினர், உறவினர்கள், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள்.

### கழக தலைமைக் கழகப் பேச்சாளர்

# வேடசந்தூர் முருகவேல் - இலக்கியா திருமணம்!

### கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. நடத்தி வைத்தார்!

திண்டுக்கல் செப்.7-

கழக தலைமை கழக பேச்சாளர் வேடசந்தூர் முருகவேல் - இலக்கியா இவர்களது திருமணம் வேடசந்தூர் அருகே பூத்தாம்பட்டியில் நடைபெற்றது. இத்திருமணத்தை கழக கொள்கை பரப்பு செயலாளர், திருச்சி சிவா எம்.பி. தலைமையேற்று நடத்தி வைத்தார்.

வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். காந்தி ராஜன் முன்னிலை வகித்தார்.

வேடசந்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் வீரா. எஸ்.டி.சாமிநாதன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட இளைஞர் அணி து.செயலாளர் கோ. ரவிசங்கர், ஒன்றிய செயலாளர்கள் கவிதா பார்த்திபன், சீனிவாசன், சுப்பையன், பாண்டி, சசி ராஜலிங்கம், ஒன்றிய பெருந்தலைவர் சவுடீஸ்வரி கோவிந்நன், மாவட்ட கவுன்சிலர் கவிதா முருகன்,

வேடசந்தூர் பேரூர் செயலாளர் கார்த்திக், எரியோடு பேரூராட்சி தலைவர் பண்ணை கார்த்திகேயன், ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்பித்தனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டம்

# சேரன் மகாதேவி கிழக்கு ஒன்றியம் - பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### இரா.ஆவுடையப்பன் சிறப்புரை! முத்துப்பாண்டி – மனிஷா செல்வராஜ் பங்கேற்பு!

நெல்லை.செப்.7-

நெல்லை கிழக்கு மாவட்டம் சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம், சேரன்மகாதேவி பேரூர் கழகம் தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் சேரன்மகாதேவி ராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றிய திமுக பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய அவைத்தலைவர் டேவிட் ஸ்டீபன் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர்கள் அபூபக்கர்,கணேசன் பேரூர் செயலாளர் மனிஷா செல்வராஜ், ஒன்றிய பொருளாளர் பாலசுப்பிரமணியன், கிளை செயலாளர் கண்ணய்யா, ஒன்றியக் குழு தலைவர் பூங்கோதை குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஒன்றிய துணை செயலாளர் அருள்ராஜ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

ஒன்றியச் செயலாளர் முத்துப்பாண்டி என்ற பிரபு வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் மாநில அணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், கணேஷ் குமார், ஆதித்தன், மாவட்ட கவுன்சிலர் சாலமன் டேவிட். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வேல்முருகன், பேரூராட்சி தலைவர் தேவி ஐயப்பன், துணை தலைவர் மாரி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் மைக்கேல் தமயந்தி மாவட்ட அணி அமைப்பாளர் பிரேம் ஆனந்த், அன்வர் உசேன், அண்ணாதுரை, பேரூர் செயலாளர் மணிகண்டன், அணி துணை அமைப்பாளர் இசக்கி பாண்டியன், சுடலையாண்டி,செல்வகுமார், சுந்தர்ராஜன், காந்தி, மதியழகன், ஜெயமாலதி, காஜாமைதீன்,கிங்ஸ்லி, செய்யது அலி, ஐயப்பன், ராமச்சந்திரன், முருகன், பாஸ்கர், ஒன்றிய குழு உறுப்பினர் கனகமணி கஸ்தூரிப்பாய், ஆனந்தலட்சுமி, பேரூராட்சி மன்ற தலைவர் ஆபிதாஜமால் உள்பட கழக நிர்வாகிகள், திரளாக கலந்து கொண்டனர்.

நிறைவில் மாவட்ட பிரதிநிதிகள் மணி,பேச்சிதுரை கிருஷ்ணன் ஆகியோர் நன்றியுரை ஆற்றினர்.

அதனைத் தொடர்ந்து சேரன்மகாதேவி பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் அவை தலைவர் ஷாஜகான் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர் அபூபக்கர், முன்னாள் செயலாளர் சுடலையாண்டி, கழக பொருளாளர் ரத்தினம்,பேரூராட்சி தலைவர் தேவி ஐயப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பேரூர் செயலாளர் மனிஷா செல்வராஜ் வரவேற்புரை யாற்றினார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வேல்முருகன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கிய உரையாற்றினார்.

நிகழ்வில் மாநில அணி துணை செயலாளர்கள் ஆவின் ஆறுமுகம் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், தமயந்தி, பொதுக்குழு உறுப்பினர் கணேசன், சார்பு அணி பிரேம் ஆனந்த், அன்வர் உசேன்,ராஜதுரை சேரை மேற்கு ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன், சுரேஷ், செய்யது அலி, ஐயப்பன், ரஜினி சுந்தர், வள்ளிநாயகம்,மகேஸ்வரி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் ஒன்றிய பிரதிநிதி இசக்கிமுத்து நன்றி உரையாற்றினார்.



இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி, போகலூர் மேற்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.குணசேகரன், ஒன்றிய அவைத் தலைவர் அப்பாஸ் கனி, ஒன்றியக்குழு துணைத் தலைவர் வழக்கறிஞர் பூமிநாதன், ஒன்றியக்குழு தலைவர் சத்யாகுணசேகரன் ,ஒன்றிய கழக பிரதிநிதிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத் துறை சார்பில் ரூ.2.28 கோடி மதிப்பீட்டில் 5 புதிய புறநகர் பேருந்துகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் ஜே.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகர் மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன், ஊராட்சி குழு தலைவர்கள் புவனேஸ்வரி, அசோக், ரமேஷ் ஆற்காடு நகர செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை,செப்.7

சிவகங்கை மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 10 ம் தேதி சுற்றுப் பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார். அவரது சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:-

10ம் தேதிசெவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி. சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முதல்வரின் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தல் . காலை.10.30 மணி. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் மாவட்ட அளவில் நடைபெற்று வரும் அரசு திட்டப்பணிகள் குறித்து ஆய்வு .பகல்.1.00 மணி காளையார் கோவில்தாலுகா நகரம்பட்டியில் நடைபெற்று வரும் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் நினைவு மண்டபம் கட்டிடப் பணிகள் குறித்து ஆய்வு. அதனைத் தொடர்ந்து சிராவயலில் நடைபெற்று வரும் அண்ணல் காந்தி ஜீவா நினைவு மண்டபம் கட்டிடப் பணிகள் ஆய்வு. மாலை 4:30 மணி.காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாக அரங்கில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். மாலை 6.00 மணி. கீழடி அருங்காட்சியகம் பார்வையிடுதல். இரவு மதுரை தங்குதல் . முன்னதாக காலை 9.00மணி. அளவில் மதுரையி. லிருந்து கார் மூலம் வருகைதரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு. மாவட்ட எல்கையான பூவந்தியில் சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இத்தகவலை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

### கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!



குமரி, செப். 7-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் 09.09.2024 - திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு நாகர்கோவில், தேரேகால் புதூர், கெங்கா கிரான்டீயூர் மண்டபத்தில் வைத்து எனது தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இந்தக் கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக 100 ரூபாய் நாணயம் வெளியீட்டிற்கு பாராட்டு தெரிவித்தல்.

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னையில் வைத்து நடைபெற உள்ள கழக முப்பெரும் விழாவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திலிருந்து கழக நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொள்வது குறித்து,

கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் நியமனம் செய்வது குறித்து,

இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் மூலம் இளைஞர்களை அதிகப்படியாக இளைஞர் அணியில் சேர்ப்பது குறித்து,

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகள் குறித்து, கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம்!

### வெ.ஜெயபாலன் தலைமை! ஆர்.எஸ்.பாரதி – சூர்யா வெற்றிகொண்டான் – சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

தென்காசி.செப்.7

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் நாளை (08.09.2024 ஞாயிற்றுக்கிழமை)மாலை 6 மணி அளவில் சுரண்டை கலைஞர் அவர்கள் நினைவா லயத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் சுந்தரமகாலிங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் தமிழ்ச்செல்வன், கென்னடி, மாவட்ட பொருளாளர் ஷெரிப், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மா. செல்லதுரை, முத்துப்பாண்டி, ஜேசுராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், ராஜேஸ்வரன், சமுத்திர பாண்டியன், கதிர்வேல் முருகன், சாமிதுரை,தமிழ்ச்செல்வி, ரவிச்சந்திரன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட துணை செயலாளர் க.கனிமொழி வரவேற்புரையாற்றுகிறார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் சேக்தாவுது தொடக்க உரை ஆற்றுகிறார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகச்சாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார். தலைமை கழக பேச்சாளர்கள் சூர்யா வெற்றி கொண்டான்,சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா,மாநில விவசாய அணி இணை செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர்,கு. செல்லப்பா,

ஒன்றிய செயலாளர்கள் செல்லத்துரை, அன்பழகன்,சிவன்பாண்டியன், ரவிசங்கர்,மாரிவண்ணமுத்து,மகேஷ் மாயவன், ஜெயக்குமார், சீனித்துரை, அழகுசுந்தரம், திவான்ஒலி, சுரேஷ்,நகர செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், கணேசன், பேரூர் கழக செயலாளர்கள் அழகேசன்,முத்தையா, ராஜராஜன், வெள்ளத்துரை,பண்டாரம், சங்கர், சுடலை, முத்து,நெல்சன், லெட்சுமணன், கோபால், சிதம்பரம், தங்கப்பா என்ற முகமது உசேன், ஜெகதீசன் உள்பட மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், சுரண்டை நகர கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கழக பேச்சாளர்கள், கழக உடன் பிறப்புக்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் பொதுக்குழு உறுப்பினர் ஏ.பி.அருள் நன்றியுரையாற்றுகிறார்.



நெல்லை கிழக்கு மாவட்டம் சேரன்மகாதேவி பேரூர் கழக தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் ஷாஜகான் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார். உடன் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், மைக்கேல்,தமயந்தி,அபுபக்கர் சுடலையாண்டி,ரத்தினம், தேவி ஐயப்பன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.